**R5313**

## THE REPORT OF THE SPIES

# வேவுக்காரர்களின் அறிக்கை

எண்ணாகமம் 13:1-3, 17 முதல் 14:25

"தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" - ரோமர் 8:31

எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களின் முதல் பிரயாணம் சீனாய் மலை வரை இருந்தது. அங்கே ஒரு வருடம் தங்கியிருந்தார்கள். இரண்டாவது பிரயாணம் எழுபது மூப்பர்களை நியமித்த பிறகும், மிரியாம் பாளையத்திற்குள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகும் ஆரம்பித்தது. அவர்களது புறப்பாடு சடங்குகளோடு கூடியதாக இருந்தது. அதாவது வெள்ளி பூரிகைகளை ஊதி, மேக ஸ்தம்பம் மற்றும் அக்கினி ஸ்தம்பம் வழி நடத்த மோசேயின் ஜெபத்துடன் புறப்பாடு இருந்தது. "கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மை பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக" என்பதே மோசேயின் ஜெபம். இது இஸ்ரயேலரின் காலை அழைப்பாக இருந்தது. இரவில் சேனைகள் தங்கும் போது மோசேயின் ஜெபமாவது: "கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரயேலரிடத்தில் திரும்புவீராக." வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், "எங்களோடு இருப்பீராக" என்பதாகும்.

அவர்களது பிரயாணம் வறண்ட வனாந்தரத்தில், சூரிய வெப்பத்தில் அவர்கள் தங்கியிருந்த சீனாய் பள்ளத்தாக்கிலிருந்து முற்றிலும் வேறானதாக இருந்தது. கானான் தேசத்திலிருந்து அவர்கள் பிரயாணப்பட்ட காதேஸ் பர்னேயா நூற்றி அறுபது மைல் தூரத்தில் இருந்தது. அது அறியாத ஆபத்துகளாகிய, சர்ப்பங்கள், திரிகிற அரேபிய கூட்டங்கள், தண்ணீர் பற்றாக்குறை முதலானவைகளால் சூழப்பட்டிருந்தது. பெண்கள், குழந்தைகள், வீட்டுப் பொருட்கள், கால்நடைகள் முதலியவைகளும் இஸ்ரயேலரின் பிரயாணம் மெதுவாக இருக்க வேண்டியிருந்தது. அவர்களது ஓரிரு மாதம் பிராயணத்திற்கு பிறகு திராட்சைப் பழம் முதல் – அறுப்புக்காலத்தில் ஜூலை மாதம் வந்து சேர்ந்தார்கள்.

காதேஸ் பர்னேயா, அவர்களது குறிக்கோளான இடம், ஒரு நல்ல இடமாக, நீர் நிறைந்த இடமாக, பாரான் வனாந்தரத்திற்கு முற்றிலும் வேறானதாக இருந்தது. இங்கே அவர்கள் தங்கி ஓய்வெடுத்தார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின், அவர்களுக்கு வடக்கே இருக்கிற பர்வதத்தை பார்த்தார்கள். ஏனெனில் அவர்கள் தெற்கு எல்லையில் இருந்தார்கள்.

### இஸ்ரயேலர்களின் பயம்

மோசே முழு விசுவாசத்துடன், அவர்கள் உடனே புறப்பட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு போக வேண்டும் என்று தீர்மானித்தார். தேவன் பல வழிகளில் தமது கிருபையை அவர்களிடத்தில் முன்னரே வெளிப்படுத்தியிருந்தார். அதாவது அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி வந்ததில், சிவந்த சமுத்திரத்தை கடந்ததில், மாராவின் தண்ணீரை இனிப்பாக்கியதில், எதிரிகளாகிய அமலேக்கியவர்களை வெற்றி கொண்டதில், மன்னாவை அனுப்பியதில், பிறகு காடைகளை அனுப்பியதில் தமது கிருபையை வெளிப்படுத்தினார். ஆசாரிப்பு கூடாரத்திலும், பகலில் மேகஸ்தம்பத்திலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் தமது பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆனால் இஸ்ரயேலர் பயமடைந்தார்கள். சீனாய் மலையின் அருகே அமலேக்கியர்களிடம் போரிட்டதைத் தவிர வேறு எந்த போர் அறிவும் பெற்றிராதவர்கள். அமலேக்கியருடன் நடந்த போரில் இஸ்ரயேலருக்கு ஜெயங்கொடுக்கும்படி, மோசேயின் கையை உயர்த்தி தேவனை நோக்கி ஜெபிக்கும்வரை அவர்களது நிலைமை மோசமாக இருந்தது. அவர்களது ஜாக்கிரதை அவர்களது விசுவாசத்தை சமநிலைப்படுத்தியது. பன்னிரண்டு வேவுக்காரரை அனுப்புவதற்கு மோசேயை அவர்கள் துரிதப்படுத்தினார்கள். இவர்கள் யோசுவா, காலேப் என்ற இரு தலைவர்கள் கீழாக பிரிந்து சென்றனர். ஒரு பிரிவினர் முழு தேசத்திற்கும் சென்று நாற்பது நாளில் திரும்பினர். இன்னொரு பிரிவினர் கொஞ்ச தேசத்தைப் பார்த்துவிட்டு சீக்கிரம் திரும்பினர். வேவுக்காரர்கள் எச்சரிக்கையுள்ளவர்களாயிருந்து, அதன் பட்டணங்களின் சுவர்கள் மிகவும் உயரமாக இருக்கின்றன. நவீன இராணுவ தளவாடங்கள் இல்லாமல் அவர்களை மேற்கொள்ளுவது கடினம் என்று அந்த தேசத்தைக்குறித்து உண்மையான அறிக்கையை கொடுத்தார்கள். மேலும் அவர்கள், தாவீது ஜெயங்கொண்ட கோலியாத்தின் மூதாதையர்களான இராட்சதர்களை கண்டதாகவும் அறிவித்தார்கள். இந்த பத்து போர்களின் அறிக்கை துர்அறிக்கையாக சொல்லப்பட்டது. ஏனெனில் அது கஷ்டத்தின் நோக்கத்தோடு சமர்பிக்கப்பட்டது. இது உற்சாகம் அளிக்கக்கூடிய, நல்ல அறிக்கை என்று கருதப்பட்ட யோசுவா மற்றும் காலேபின் அறிக்கைக்கு மாறானதாக இருந்தது. இந்த அறிக்கைகளும் தேசத்தின் செழுமையை, அதன் பழங்கள், தேன் முதலானவைகளை தெரிவித்தன. யோசுவா மற்றும் காலேபின் அறிக்கை விசுவாசத்தின்படி ஆதரிக்கப்பட்டதாக இருந்தது. பாதகமான அறிக்கை பயத்தினாலும் தேவனுடைய கிருபையையும் வழி நடத்துதல்களையும் மறந்ததாக இருந்தது.

வேவுக்காரர்கள் தங்களை ஒரு குழுவாக எண்ணிக்கொண்டு அங்கு நுழைய முடியுமா, முடியாதா என்பது பற்றி இல்லாமல் அதற்குள் எப்படி நுழைவது என்பது பற்றியே இருந்திருக்க வேண்டும். நுழைவது சாத்தியம் என்பது முன்னமே தேவனுடைய வாக்குத்தத்தத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இவைகளை யோசுவாவும் காலேபும் தங்கள் அறிக்கையில் விட்டிருந்தார்கள். தேவன் அவர்களை எகிப்தியர்களிடமிருந்தும் அமலேக்கியர்களிடமிருந்தும் விடுவிக்க கூடுமானால், வனாந்தரத்தில் தண்ணீரும் வனாந்தரத்திலிருந்து மன்னாவும் அவரால் கொடுக்கக் கூடுமானால், கானானுக்குள் அவர்களை கொண்டு வருவேன் என்ற அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தேவையான சகலத்தையும் நிச்சயமாக அவர் செய்வார்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடம்

நிழலான ஜனங்களின் அனுபவங்களிலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் பல்வேறு பாடங்களை பெறக்கூடும். நாம் இந்த காரியத்தை தனிப்பட்ட நிலைப்பாட்டில் கவனித்தோமானால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கானானின் இளைப்பாறுதலில் நுழைவதற்கும் கர்த்தரால் வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ளவும் ஒரு விசேஷித்த அழைப்பை தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் காண்போம். பார்வோன் மற்றும் எகிப்தியர்களால் நிழலாக காண்பிக்கப்பட்ட சாத்தானுக்கும் உலகத்திற்கும் அவன் தன் முதுகை திருப்புகிறான். விசுவாசத்தினால் அவன் தனக்கும் சத்துருவுக்கும் இடையே நீதிக்காகவும் தேவனுக்கு கீழ்ப்படிதலுக்கும் ஒரு திடமான தீர்மானத்தை வைக்கிறான். தேவனுடைய கிருபையான வழிநடத்துதல்களால் உடன்படிக்கை செய்யும் இடத்தை அடைகிறான்.

அப்பொழுதிலிருந்து புது சிருஷ்டியாக அவனது பிரயாணங்கள், வனாந்தர பிரயாணம், சோதனைகளால் சூழப்பட்டு, ஒரு முன்னேறிய சிலுவைப் போர் வீரனின் நிலைமைக்கு வரும் வரை தொடர்கிறது. அங்கே அவன் புதிய வாழ்வை, புதிய அனுபவத்தை, தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக உணருகிறான். உடனே அவன் தைரியத்துடனும் விசுவாசத்துடனும் உள்ளே நுழைந்து ஆவிக்குரிய சகல நல்ல காரியங்களையும் சொந்தமாக்கிக் கொள்ளுகிறான்.

தேசத்தின் சத்துருக்கள் மாம்சீக பலவீனத்தையும் விழுந்து போன சுபாவத்தின் எதிர்ப்புகளையும் குறிக்கும். இவைகளெல்லாம் ஜெயங்கொள்ளப்பட வேண்டும். இவைகளை ஜெயங்கொள்ளுகிறதற்குத்தக்கதாக, அவன் நுழைந்து கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவனது சுதந்தரத்தை அனுபவித்து சொந்தமாக்கிக் கொள்ளுகிறான். சிலர் விசுவாசத்தினால் இதை சரியான காலத்தில் செய்கிறார்கள். மற்றவர்கள் சோதனைகளை ஆராய்கிறார்கள், ஐயோ! அடிக்கடி உற்சாகம் குறைந்தவர்களாகிறார்கள், பயமும், அவநம்பிக்கையும் முறுமுறுப்பும் அடைகிறார்கள். சில சமயம் அவர்கள் உலகத்தை விட்டே வெளியேறாமல், அவ்விடத்திற்கு திரும்பக் கூடும்.

வேவுக்காரர்களின் அறிக்கை, தேவனுடைய வாக்குத்தத்தத்தை பார்க்கக்கூடிய பல்வேறு கோணத்தை குறிப்பிடுகிறது. விசுவாசக் கண்களுக்கு எல்லாம் சாத்தியமானதாக இருக்கிறது. அவிசுவாச கண்களுக்கு, மாம்சத்தை ஜெயம் கொள்ளுவது இயலாததாக இருக்கிறது. நாம் முன்னேறி தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுவோமாக! நாம் நல்ல தைரியம் உள்ளவர்களாக இருந்து, நல்ல போராட்டத்தையும் போராடுவோமாக! விசுவாசத்தை சரியானபடி அப்பியாசப்படுத்தினால், தேவன் நம்மோடு கூட இருந்து, நமக்கு வெற்றியைத் தருவார்!

## தேவன் போரை ஊக்குவிக்கிறாரா?

இந்த பாடத்தை படிக்கையில், பிற ஜனங்களால் சொந்தமாக்கப்பட்டிருந்த தேசத்தை இஸ்ரயேலர்கள் கைப்பற்ற போர்தொடுத்தார்கள் என்பதையும், இந்த படையெடுப்பு இஸ்ரயேலரில் அநேக உயிர்களையும், கானான் தேசத்தினர் பலரது உயிர்களையும் அழிக்கும் என்பதை நினைவுகூர்ந்து, அநேகர் குழப்பமடைவார்கள். தேவன் இப்படிப்பட்ட செய்தியை மோசேக்கும் இஸ்ரயேலருக்கும் கொடுத்தார் என்பது நம்பப்படுவதற்கு சரியானதாக காணப்படவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இயேசு சமாதானப்பிரபு என்றும், தேவன், பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுவதற்கு இது எதிரானதாக இருக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவைகள் எப்படி சமரசப்படுத்தப்படுகிறது என்று அஞ்ஞானவாதிகள் கேட்கிறார்கள். இஸ்ரயேலர்கள் கானானியரின் தேசத்தை திருடுவதில், அவர்களை கொல்லுவதில் நீதி எங்கே கட்டளையிடப்படுகிறது? சில வேதவாக்கியங்களின்படி தேசத்தின் சகல ஜனங்களும் கானானியர், ஏத்தியர், பெர்சியர், எபூசியர் முதலான சகலரும் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும்.

வேதாகமத்தை புரிந்து கொள்ளுவதற்கு, இதை நாம், இருண்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நமது விசுவாச கோட்பாடுகளின்

நிலைப்பாட்டின்படியோ நமது சொந்த அபூரணமான அறிவின் நிலைப்பாட்டின்படியோ பாராமல் வேதாகமத்தின் நிலைப்பாட்டின்படி நாம் நோக்க வேண்டும். வேதாகமத்தை அதன் சொந்த வெளிச்சத்தில் பார்த்தால் மட்டுமே, வேதாகமமானது சீரானதாக, அழகானதாக தெய்வீகமானதாக இருக்கிறது.

முதலாவது வேதாகமானது நமது விசுவாச கொள்கைகளை எதிர்க்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இந்த விசுவாச கொள்கையானது கொல்லப்பட்ட கானானியர்கள் அனைவரும் நேராக நித்திய ஆக்கினைக்கு சென்று, இன்னும் அங்கே வேதனைப்படுகிறார்கள் என்று கூறுகிறது; ஏனெனில், அவர்கள் உண்மையான தேவனையும், அவரால் இரட்சகராக அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவையும் அறியாதிருந்தார்கள் என்று கூறுகிறது. அந்த ஜனங்களும் உலகத்தின் சகல ஜனங்களும் ஆதாமின் பிள்ளைகள் என்றும் அனைவரும் மரண தீர்ப்பினால் அழிகிறார்கள் என்றும் வேதாகமம் நமக்கு கூறுகிறது. அவர்கள் மரித்த போது அவர்கள் எங்கேயும் உயிருடன் இல்லை. அவர்கள் மரித்திருக்கிறார்கள், அவர்கள் கொள்ளை நோயினாலோ அல்லது பஞ்சத்தினாலோ அல்லது ஷயரோகத்தினாலோ அல்லது நிமோனியாவிலினாலோ மரித்தாலும் எல்லாம் ஒன்று தான். நீ சாகவே சாவாய் என்று தேவன் தீர்ப்பளித்த தண்டனையின்படி அவர்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். (ஆதியாகமம் 2:17 மார்ஜின் காண்க)

ஆகையால் எந்த வழியில் நாம் மரிக்கிறோம் அல்லது நமது அனுபவங்கள் அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்பது முக்கியமில்லை. அமலேக்கியர் மற்றும் கானானின் மற்ற ஜனங்களின் அக்கிரமம் நிறைவுக்கு வந்ததாக தேவன் அறிவித்தார். சொல்லப்போனால் அவர்கள் நீண்ட நாள் வாழ்வதால் அவர்களுக்கும் பிரயோஜனமில்லை, மற்றவர்களுக்கும் பிரயோஜனமில்லை என்று தேவ நீதி தீர்மானித்தது, அவர்கள் பூமியில் வெறும் கணக்கில் இருப்பார்கள்.

வருகிற ஆசீர்வாதங்களுக்கு நிழலாகவும் முன் மாதிரியாகவும் இஸ்ரயேலரை ஆக்கின தேவன், அவர்களை ஒரு நிழலான ஜனங்களாகவும் பயன்படுத்தினார். தேவன் இஸ்ரயேலருக்கு கானானை கொடுத்து, இப்படியாக எப்படி ஆவிக்குரிய இஸ்ரயேலர் மெய்யான கானானுக்குள் நுழைந்து அதை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதற்கு இன்னொரு நிழலை ஏற்படுத்துகிறார். மாம்சம் மற்றும் பிசாசின் வேலைகளை அழிப்பதை விளக்குவதற்காக தேசத்தின் ஜனங்களின் அழிவை ஏற்படுத்துகிறார். அவருடைய ஜனங்கள் தங்களது சொந்த மாம்சத்திலே ஊடுருவியுள்ள தீய போக்குகளை ஜெயங்கொள்ளவும் நல்ல போராட்டத்தை போராடவும் இதை அவர்கள் தங்களில் நிறைவேற்றவும் வேண்டும்.

## கானானியர்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை

தேவன் எதிர்கால ஜீவனை யாருக்கும் கொடுக்கும்படி நீதியினால் கட்டுப்படுத்தப்படாதிருந்தும் கூட அவர் அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்காகவே, இஸ்ரவேயரும், கானானியரும் உள்ளடக்கிய முழு உலகத்தின் பாவத்திற்கும் கிறிஸ்து முன்னமே மரித்திருக்கிறார். இந்த இரட்சிப்பின் திட்டத்தை ஒதுக்கி வைத்து விட்டு, முழு இனமும் மரண தண்டனையின் கீழ் அழிந்து போயிருக்கும். எனினும் தேவனுடைய கிருபையினால் நாம் அழியாமல் மரண தண்டனையிலிருந்து மீட்கப்படுவோம். ஆகையால் நாம் வாசிக்கிறதாவது: “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” (யோவான் 3:16)

ஒரே மனிதனின் மீறுதலினாலே முழு உலகமும் மரண நிலைமைக்குள் வந்தது போல, ஒரே மனுஷனுடைய கீழ்ப்படிதலினாலே மரண நிலைமையிலிருந்து மீட்கப்படுவார்கள். இந்த ஒருவர் “எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே;” “ஒரே மனுஷனாலே மரணம் உண்டானது போல, ஒரே மனுஷனாலே மரித்தோரின் உயிர்தெழுதலும் உண்டாயிற்று.” “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.” சபையானது முதற்பலன்களாக இருக்கும். (1 கொரிந்தியர் 15:21,22; வெளிப்படுத்தல் 20:6)

ஒரு வார்த்தையில், தேவனுடைய திட்டம், மேசியாவின் ராஜ்யம், அதன் அங்கங்கள், சபையாக, மணவாட்டியாக இப்பொழுது உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆயிரம் வருடம் மீட்பருடன் சேர்ந்து உலகத்தின் சகல ஜாதிகளையும் பாவம் அழிவு, மரணம் மற்றும் கல்லறையிலிருந்து மீட்டு, ஆசீர்வதித்து உயர்த்தி, இழந்ததை திரும்ப கொடுப்பார்கள்.

சோதோமியர்கள் இந்த வகுப்பாராயிருந்து உயிர்த்தெழுதலின் மூலமாக சீர்படுத்தப்படுவார்கள் என்று இயேசு

விளக்குகிறார். அதே போல அந்த கானானியர்களும் திரும்பகொடுத்தலுக்குக் கீழாக வருவார்கள். (எசேக்கியல் 16:55; மாற்கு 6:11; அப்போஸ்தலர் 3:19-21)

## செவிடனின் செவிகள் திறவுண்டுபோம்

கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதின் மூலமே யாரும் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவார்கள். ஆனால் மெய்யான ஒளியாகிய இயேசு, ''உலகத்தில் வந்த எந்த மனுஷனையும்'' பிரகாசிப்பிப்பார் என்பது தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது. கானானியர்கள், சோதோமியர்கள் மற்றும் இயேசுவின் நாட்களுக்கு முன் வாழ்ந்த சகல ஜனங்களும், தேவனுடைய கிருபையின் சத்தியத்தை மற்றவர்களும் சமமாக கேட்கிற சந்தர்ப்பத்தை, இயேசுவை இரட்சகராக நம்பி அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிற சந்தர்ப்பத்தை பெற வேண்டும்.

நமது காலத்தின் சகல புறஜாதிகளுக்கும் இயேசுவின் நாளிலிருந்து இன்றைய வரைக்கும் இருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கும் இதே காரியம் பொருந்தும். தேவனுடைய அன்பின் செய்தியை புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் முடியாதபடி, தப்பறையின் போதகத்தின் மூலம் சாத்தானால் கண்களும் காதுகளும் செயல்படாதபடி நிறுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்தவ தேசங்களில் வாழ்ந்திருக்கிற மகா திரளான புறஜாதிகளுக்கும் இதே காரியம் பொருந்தும். குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம் என்றும் தேவனுடைய மகிமையின் அறிவினால் பூமி நிறைந்திருக்கும் என்றும் வேதவாக்கியங்கள் உறுதியளிக்கின்றன.

இயேசுவின் தலைமையின் கீழ் சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக இருக்கிறது. இவர்கள் மூலமாக மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஆயிரம் வருடங்களாக ஒவ்வொரு ஜாதிக்கும் ஜனங்களுக்கும் கோத்திரத்திற்கும் பாஷைக்காரருக்கும் வரும். (கலாத்தியர் 3:29)

சகல ஜனங்களும் ஆதாமின் மரண தண்டனையிலிருந்து மீட்கப்பட வேண்டும். இரட்சகரைப் பற்றி அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முழு சந்தர்ப்பத்தை சகலரும் பெற வேண்டும். அறிவுடன் பொறுப்பும் வரும். தேவனுடைய கிருபையை வேண்டுமென்றே, தெரிந்தே மறுதலித்து நீதிக்கு பதிலாக பாவத்தை தேர்வு செய்கிறவர்கள் துஷ்டமான பாவியாக கருதப்பட்டு, நித்திய ஜீவனுக்கும் தேவனுடைய எந்த விதமான கிருபைக்கும் அபாத்திரராவார்கள். இப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அதிலிருந்து அவர்களுக்கு மீட்பு கிடையாது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிக்க மாட்டார். ஆகையால் இனி அழிவிலிருந்து உயிர்த்தெழுதல் இருக்காது. அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். பரிசுத்த பேதுரு அறிவிப்பது போல, அவர்கள் மிருக ஜீவன்களைப் போல கெட்டழிந்து போவார்கள். (2 பேதுரு 2:12 )

தேவனைப் பற்றிய ஒரு தெளிவான அறிவுக்கு வந்து, வேண்டுமென்றே தெரிந்தே பாவத்தை தெரிந்து கொண்டவர்களுக்கு தற்கால வாழ்வின் முடிவில் எந்த நம்பிக்கையையும் கொடுக்காது. மீறுதல் பண்ணுகிற மற்றவர்கள் நீதியான தண்டனையை பெறுவார்கள் என்று வேதம் உறுதியளிக்கிறது. விதைக்கிறவன் எவனோ அவன் அறுக்கவும் செய்வான். தேவன் மற்றும் வேதாகமத்தினின்று விரட்டுகிற நித்திய ஆக்கினை என்கிற பயங்கரமான போதனை, வேதகாமத்தின் போதனை அல்ல. ஆனால் இது பிசாசுகளின் போதனைகள் என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். (1தீமோத்தேயு 4:1)

''நீண்டகாலமாக மறைக்கப்பட்டிருந்த அதிசயமான இரகசியம்
நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.
மகிமையின் கதையை பிரகடனப்படுத்து –
கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்.''
உலகின் புண்ணுக்கு தேவை கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே
கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாகிய உங்களுக்குள் இருக்கிறார்
இதை பெறமுடியுமா? பிறகு நீங்கள் இருக்கிறீர்கள்
உண்மையில் கிறிஸ்துவின் ஒரு பகுதியாக.''